மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.135/2016

வாக்குமூலம். வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரெங்கநாதன் | ஜாதி | |
| த/பெ. | வீரப்பன் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 67 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 21.06.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வாதி எனக்கு உறவினரா என்றால் தெரிந்தவர் தான். வாதியை எனக்கு 25 வருடமாக தெரியும். நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள அசோக் வாங்கிய கடனுக்குண்டான ஆவணங்களை நான் பார்த்ததில்லை. அசோக் யாரிடம் கடன் பெற்றார் என்றால் இராமையா என்பவரிடம் கடன் பெற்றார். இராமையாவை பார்த்ததில்லை. இராமையா எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் ஆந்திரா என்று சொல்லுகிறார்கள். எந்த ஊர் என்று தெரியவில்லை. இராமையாவை நாங்கள் பார்த்ததில்லை என்றால் சரிதான். கடன் தொகைக்கு பாதுகாப்பாக எழுதி கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை.

2) எந்த தேதியில் மேற்சொன்னவாறு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. 2-ம் பிரதிவாதி ஆந்திரா என்பது எனக்கு நேரடியாக தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 2-ம் பிரதிவாதி ஆந்திர மாநிலத்தை சேர்ந்தவர் என்று எனக்கு யார் சொன்னது என்றால் வாதி ராஜாமணி குரூப் சொன்னார்கள். எந்த தேதியில் மேற்கண்ட சங்கதியை சொன்னார்கள் என்றால் 2021-ம் ஆண்டு சொன்னார்கள். எந்த சந்தர்ப்பத்தில் மேற்கண்ட சங்கதியை சொன்னார்கள் என்றால் என்னை ஏமாற்றி விட்டார்கள். மனஉளைச்சலாக இருக்கிறது. ஒரு ரூபாய் கொடுக்காமல் போலி பத்திரம் எழுதி வாங்கிவிட்டார்கள் என்று சொன்னார். மேற்கண்டவாறு போலி பத்திரம் வாங்கிக்கொண்டார்கள் என்று நான் சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லவில்லை.

3) 1-ம் பிரதிவாதியும், வாதியும் உறவினர்களா என்றால் இல்லை இருவரும் பழக்கப்பட்டவர்கள். எனக்கு தெரிந்து மேற்சொன்ன இருவரும் இரண்டு வருடங்கள் தான் பழக்கப்பட்டவர்கள். அதனல் நிரூபண வாக்குமூலத்தில் 1-ம் பிரதிவாதி அசோக் பெற்ற கடன் தொகைக்காக பாதுகாப்பு மட்டுமே கிரையப்பத்திரம் 2-ம் பிரதிவாதிக்கு எழுதி

கொடுக்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன கிரையப்பத்திரத்தை நான் பார்க்கவில்லை. என்னிடம் மேற்படி பத்திரத்தின் நகலும் காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

4) 2-ம் பிரதிவாதியை பொறுத்து என்னை யார் என்றே 2-ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றாலும், வாதிக்கும், எனக்கும் என்ன பழக்கம் என்பது 2-ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. 2-ம் பிரதிவாதி ஆந்திராவிலிருந்து தாவா சொத்தை எதற்காக கிரையம் வாங்கினார் என்றால் அவர் கிரையம் வாங்கியதே எங்களுக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதி மூலமாக வாதி 2-ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுத்தார். 2-ம் பிரதிவாதி தனது தொழிலுக்கு தேவைப்படுவதால் வழக்கு சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். வாதிக்கு வேண்டியர் என்ற காரணத்தினால் சாட்சிய வாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி விவசாயம் செய்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக எங்கள் ஊரில் கிரையம் வாங்கினால் கிரையம் வாங்கியவர் அனுபவத்தில் தான் சொத்து இருக்கும் என்று சொன்னால் சரிதான். 2-ம் பிரதிவாதி சுவாதீனத்திலும் அனுபவத்திலும் தாவா சொத்து இருக்கிறது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**